## அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் குழு

### ஊடக அறிக்கை

2016.02.14 **ஆம் திகதி**

2016 ஜனவரி மாதம் தொடர்ந்து 05 நாட்களாக கொழும்பு மாவட்டத்தில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அமர்வுகளை நடாத்தியதன் பின்னர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் குழு பெப்ரவரி மாதம் ஏனைய மாவட்டங்களில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கான அமர்வுகளை ஆரம்பித்துள்ளது. இதுவரை கம்பஹா, மாத்தளை, களுத்துறை, கண்டி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த இரு வாரங்களுக்குள் குழு அங்கத்தவர்கள் ஏனைய மாவட்டங்களிலும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அமர்வுகளை நடாத்தவுள்ளனர். (நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விபரம் இணைக்கப்பட்டுள்ளது)

பொது மக்கள் மிக ஆர்வத்துடன் இந்த அமர்வுகளில் கலந்து கொண்டனர். சகல மாவட்டங்களிலும் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாகவும் நாட்டின் ஆட்சி, நிர்வாக நடவடிக்கைகளுடன் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பொதுமக்கள் தமது பிரேரணைகளை முன்வைத்தனர். இதனூடாக பொது மக்களின் அடிப்படை எதிர்பார்ப்புக்கள், விசேடமாக அரசாங்கம் மற்றும் பிரஜைகளிடையே நிலவும் தொடர்பு பற்றிய மக்களின் கண்ணோட்டம் சம்பந்தமாக குழுவுக்கு புரிந்துணர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைப்பதனால் பொது மக்களின் கருத்துக்கள் மிக முக்கியமானவைகளாக இருக்கின்றன. பொது மக்கள் முன்வைக்கும் பல்வேறுபட்ட கருத்துக்களை எவ்விதத் தடைகளுமின்றி முன்வைப்பதற்கு குழு அவர்களுக்கு வாய்ப்பை வழங்கியுள்ளது.

இந்த அமர்வுகள் பொது மக்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளதனால் ஊடகவியலாளர்கள் உட்பட அநேகமானவர்களுக்கு இதனை அவதானிப்பதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது. இந்த அமர்வுகளின்போது பொது மக்கள் முன்வைக்கும் கருத்துக்கள், அவர்களின் பொறுமை, ஆதரவு மற்றும் அரசியல் அனுபவம் சம்பந்தமாக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். சில நேரங்களில் பொது மக்கள் கருத்துக்களை முன்வைக்கும் வரை குழுவுக்கு மிக நீண்ட நேரம் காத்திருக்கவும், ஏனையோரின் கருத்துக்களை செவிமடுக்கவும் வேண்டியேற்பட்டது. இவை, எமது நாட்டு மக்களிடையே காணப்படும் ஜனநாயகம் பற்றிய சிந்தனையின் பலத்தை எடுத்தியம்பும் பிரதான காரணிகள் என்பதே எமது கருத்தாகும். பொது மக்களின் கருத்துக்களை செவிமடுத்து அவை தொடர்பாக கவனத்தை ஈர்த்து அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட எமது

பரிந்துரைகளுடன்கூடிய அறிக்கையொன்றை அரசியல் யாப்பை வரையும் அமைச்சரவை உப குழுவிடம் ஒப்படைப்பதே எமது முக்கிய பணியாகும்.

பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அமர்வுகளின்போது வாய் மூலம் சமர்ப்பிக்கும் கருத்துக்கள் தவிர சமூக ஊடகங்களின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் பல்வேறுபட்ட எழுத்து மூலமான கருத்துக்களும் குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலமான கருத்துக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான இறுதித் திகதி 2016 மார்ச் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வரவேற்புக் காரணமாக கொழும்பைப் போன்றே ஏனைய மாவட்டங்களிலும் மார்ச் மாதத்தில் பொது மக்கள் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சில அமர்வுகளை நடாத்துவதற்கு குழு திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, 2016 மார்ச் மாதம் 03, 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் கொழும்பு மாவட்டத்திற்கான பொது மக்கள் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அமர்வுகளை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குழுவினால் மார்ச் மாதத்தில் அரசியலமைப்பு சம்பந்தமான நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் போன்றோர்களைச் சந்தித்து அரசியல் யாப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக அவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள பொது மக்களின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்து அவற்றை வகைப்படுத்தும் நடவடிக்கையை குழு தற்போது ஆரம்பித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அமர்வுகளில் ஆர்வத்துடன் கலந்துகொள்ளுமாறு குழு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த நடவடிக்கையின்போது ஊடகங்கள் வழங்கிய தாராள ஒத்துழைப்புக்காக குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் பொதுமக்கள் தமது கருத்துக்களை சமர்ப்பிக்கும்போது அக்கருத்துக்களின் அடிப்படைப் பண்பு சம்பந்தமாக தமது கவனத்தை ஈர்த்து ஆர்வத்துடன் சமர்ப்பித்தல் சம்பந்தமாகவும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. இது இலங்கை மக்களுக்கு தமது அதியுயர் சட்டத்தை தயாரிக்கும் பணியில் பங்கேற்பதற்காகக் கிடைத்த பெறுமதிமிக்க சந்தர்ப்பமாக இருப்பதுடன் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உச்சப் பயனை அடைந்துகொள்ளுமாறு குழு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றது.